பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 28 (14—12—71) செவ்வாய் வெளியூர்: கார்த்திகை 29 (15—12—71) புதன் [இதழ்: 152

எதிரியின் இழப்பு

இதுவரை, கடந்த ஆறு நாள் போரில் பாகிஸ்தானின் இழப்பு வருமாறு:—

விமானங்கள்	83
டாங்கிகள்	163
போர்க் கப்பல்கள்	3
நீர்மூழ்கிகள்	2
பீரங்கிப் படகுகள்	16

இந்தியாவை மிரட்ட முயற்சி

அமெரிக்கா -- சீனு ஆகிய நாடுகளின் கூட்டுச் சதி

ஏழாவது கடற்படை இந்துமாக் கடல் நோக்கி வருவதேன்?

வல்லரசுகளிடையே போர் மூளும் அபாயம்?

புதுடில்லி, டிச. 14—

இந்தியா -- பாகிஸ்தான் போர் இப்போது ஒரு முக்கியக் கட்டத்தை அடைந்துவிட்டிருக்கிறது.

வங்க தேசத்தில் டாக்காவின் வீழ்ச்சி மிக வேகமாக நெருங்கி வருகிறது. நமது படைகளின் பீரங்கித் தாக்குதலுக்குட்பட்ட தூரத்திலேயே இப்போது டாக்கா இருக்கிறது; இன்னும் 24 அல்லது 48 மணி நேரத்தில் டாக்காவைக் கைபபற்ற முடியும் என்று கருதப்படுகிறது. வெளிநாட்டுப் பததிரிகை நிருபர்களும் இதனை உறுதி செய்கின்றனர்.

அமெரிக்காவின் 7-வது கடற்படை இந்தியக் கடலுக்கு வருவதேன்?

தோல்விமேல் தோல்வியடைந்துவரும் பாகிஸ்தானுக்குத் தைரியமூட்ட, சைகோன் கடலிலிருந்து புறப்பட்டுவரும் அமெரிக்காவின் 7-வது கடற்படை இந்தியக கடற்பகுதியை நோக்கிவந்து வந்துகொண்டிருப்பதாகவும் செய்தி ஒன்று கூறுகிறது.

இதே நோக்கத்துடன் சீனுவும் இமாலயப் பகுதியில் தனது துருப்புக்களின் நடமாட்டத்தைப் பெருக்கிவருவதாக மற்ளுெரு செய்தி தெரிவிக்கிறது

பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்படவிருக்கும் போர் நிறுத்தத் தீர்மானத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்தம் செய்வதே சீன -- அமெரிக்கக் கூட்டுச் சதியின் நோக்கமாக இருக்கக்கூடுமாம்.

15 பேர்களை மட்டுமே ஏற்றிச்செல்வதற்கு 90,000 டன் எடையுள்ள கப்பலா?

சைகோனிலிருந்து வந்துகொண்டிருப்பதாகக் கூறப்படும் அமெரிக்காவின் 'என்டர் பிரைஸ்' என்ற விமானந்தாங்கிக் கப்பல் 90,000 டன் எடையுள்ளது; இதில் அணு ஆயுதங்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன; மற்றும் இந்தக கப்பலில் 100 போர் விமானங்கள் -- வெடி விமானங்கள் -- ஹெலிகாப்டர்கள் -- சாமான்களை ஏற்றிச் செல்லும் சிறு விமானங்கள இருக்கின்றன; இதற்குப் பாதுகாவலாகப் பல துணைப் போர்க் கப்பல்களும் வருகின்றன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்பல் இந்தியக் கடலுக்குள் வருவதற்கான காரணம், டாக்காவில் சிக்கிக்கொண்ட அமெரிக்கக் குடிமக்களை வெளியேற்றுவதற்குத்தான என்று காரணம் கூறப்படுகிறது; ஆனால் டாக்காவில் இப்போது இருந்துவருபவர்கள் 15 அமெரிக்கர் மட்டுமேதான்; நேற்று பிரிட்டிஷ் விமானப் படை விமானங்கள் அவர்களை வெளியேற்ற உதவி செய்வதாகக் கூறியபோது, அவ்வுதவியை ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுத்துவிட்டனர்.

இந்தப் பதினைந்து பேர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்குத்தான் 90,009 டன் எடையுள்ள கப்பல் -- ஏராளமான ஆயுத வசதிகளுடன் -- வந்துகொண்டிருக்கிறது என்று கூறுவதில் நோக்கர்கள் வியப்புத் தெரிவிக்கின்றனர்.

கூட்டாளிக்குத் தெம்பூட்டத் திட்டம்

இந்தியாவின் தாக்குதலைத் தாங்கிக்கொள்ள இயலாமல் சோர்ந்து போயிருக்கும் பாகிஸ்தானுக்கு புதிய தெம்பூட்டவே, சீன -- அமெரிக்க கூட்டாளிகள் தங்கள் புது முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

இரஷ்யக் கடற்படை வருவதால்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாம்

"பாகிஸ்தானுக்கு அரசியல் ஆதரவு அளிப்பதற்காகப் பல நடவடிக்கைகளுக்கு நிக்சன் உத்தரவிட்டிருக்கிருர்" என்று 'நியூயார்க் டைம்ஸ்' கூறியிருக்கிறது.

அமெரிக்கக் கடற்படை வருவதற்கு ஒரு காரணத்தையும் அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனராம்; இந்தியாவுக்கு உதவி செய்யும் பொருட்டு இரஷ்யக் கடற்படை சில கப்பல்களை அனுப்பி வருவதாகத் தங்களுக்குத் தெரியவருவதாக அவர்கள் கூறுகின்றனராம்; இதற்குப பதிலாகவே அமெரிக்கக் கப்பல் வங்கக் கடலுக்கு வருகிறது.

அமெரிக்க அதிபர் நிக்சன், இந்தியக் கடலில் இரஷ்யாவின் கடற்படை அனுப்பப்படுவது குறித்து இரஷ்யத் தலைமையமைச்சர் கோசிஜினுடன் தொடர்புகொண்டு இதுபற்றி எச்சரித்திருப்பதாகவும், இந்நிலைமையைப் பார்த்துக்கொண்டு அமெரிக்கா வாளாவிருக்காது என்றும் தெரிவித்திருப்பதாகவும் ஐ. நா. வட்டார இராசதந்திரிகள் தெரிவித்தனர்.

ஏவுகணைகளுடன் கூடிய ஓர் இரஷ்யப் போர்க் கப்பல், விளாடிவாஸ்டாக் கடற்படைத் தளத்திலிருந்து தெற்கு நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறதாம்; சென்ற வாரம், ஏவுகணைகளுடன் கூடிய ஒரு நாசகாரிக கப்பலும் இப்பகுதிக்கு வந்திருக்கிறதாம்; இங்கு இதுவரையில், 12-முதல் 15 சோவியத் கப்பல்கள்வரை இருக்கிறதாம்; இவைகள் அனைததும் அமெரிக்கச் செய்திகளாகும்.

இந்தியாவை நிர்ப்பந்திக்க முயற்சி?

இந்தச் செய்திகள் எது குறித்தும் இந்திய அரசுக்கு அதிகாரபூர்வமான தகவல் இல்லை; இவைகளையெல்லாம இந்தியா அமைதியாகக் கூர்ந்து கவனித்துவருகிறது.

இந்தச் செய்தி குறித்துக் கருததறிவித்த அரசு அறிவிப்பாளர் ஒருவர், 'செய்தி உண்மையானுல், அது, இந்தியாவைத் தமது கருத்துக்கு இணங்கவைக்க அமெரிக்கா கடைபிடிக்கும் நிர்ப்பந்தமாகததான் இருக்கும்' என்று கூறினுர்.

லடாக் -- நேபா எல்லையில் சீனத் துருப்புக்கள் நடமாட்டம் குறித்தும் அரசுக்குத் தகவல் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்; ஆனுல், 'இச்செய்தி உண்மையாக இருக்குமானுல் இதுவும் இந்தியாவை நெருக்கும் ஒரு நடவடிக்கையாகத்தான் இருக்கும்' என்ருர் அவர்; ஏனெனில், 'இதனுல் சீனு எவவிதப் பயனும் அடையப்போவதில்லை' என்றும் அவர் குறிப்பிட்டார்.

வங்கக் கடலின் சீன நீர்மூழ்கி காணப்பட்டதாகக் கூறிய செய்தி பற்றிக் கேட்டதற்கு, 'எனக்குத் தகவல் இல்லை' என்ருர் அவர்.

(4-ம் பக்கம் பார்க்க)

போரை நிறுத்தப் புதிய முயற்சி

பாதுகாப்புச் சபையில் இத்தாலி -- ஜப்பான் தீர்மானம்

நியூயார்க், டிச. 14—

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இரஷ்யாவின் 'வீட்டோ' அதிகாரத்தால் அமெரிக்காவின் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டபின், இந்தியா -- பாகிஸ்தான் போரை நிறுத்தப் புது முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்துள்ளது.

"இதுபற்றி ஆராய மூவர் கொண்ட குழு ஒன்றை நியமிக்க வேண்டும்" என்று இத்தாலியும், ஜப்பானும் சேர்ந்து ஒரு தீர்மானம் கொண்டுவந்துள்ளது.

இன்று காலை 7-30 மணியளவில் ஒத்திவைக்கப்பட்ட பாதுகாப்புச் சபையின் கூட்டம் நாளை காலை 9-30 மணிக்குக் கூடி, இப்பிரச்சினையை விவாதிக்கும் என்று தெரிகிறது.

இந்தியாவின் உறுதியான நிலை

'போர் நிறுத்த முயற்சி எதுவும் வங்காள தேச அரசியல் தீர்வை உள்ளடக்கியதாகத்தான் இருக்கவேண்டும்; இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள அபாயம் நீக்கப்படுவதற்கு நியாயமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானுல் அதனை மகிழ்ச்சியுடன் ஆராய இந்தியா முன்வரும்; ஆனுல், வங்காளப் பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னர்தான் இது பற்றிப் பேச முடியும்"

என்று பாதுகாப்புச் சபையில் இந்திய வெளிநாட்டு விவகார அமைச்சர் சுவரண் சிங் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

நாட்டுப் பாதுகாப்பு நிதி

சென்னை, டிச. 14—

நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு நாளும் நன்கொடைகள் குவிந்துகொண்டு வருகின்றன.

நேற்றுவரை முதலமைச்சர் கலைஞரிடம் அளிக்கப்பட்ட தொகை ரூ. 1,01,249.95 ஆகும்.

மற்ருெரு கப்பல் மடக்கப்பட்டது

பம்பாய், டிச. 14—

ஜப்பானிலுள்ள ஓசாகா துறைமுகத்திலிருந்து கராச்சிக்கு 10,000 டன் இரும்பை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த ஒரு கிரேக்கக் கப்பலை, மேற்கு வட்டாரக் கடற்படையினர், அரபிக் கடலில் மடக்கிப் பிடித்தனர்.

'எஸ். எஸ். எதீனியன்' என்னும் அந்தக் கப்பல் பம்பாய்க்குக் கொண்டுவரப்படுகிறது.

அமெரிக்காவின் இந்திய விரோதத் தீர்மானம்

பாதுகாப்புச் சபையில் மீண்டும் தோல்வியடைந்தது

இரண்டாம் முறையாக 'வீட்டோ'வைப் பயன்படுத்தியது இரஷ்யா

ஐ. நா., டிச. 14—

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நேற்று அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒன்றை சோவியத் இரஷ்யா, தனது வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்து செய்தது.

இந்தியாவுக்கு விரோதமான இந்தத் தீர்மானத்தைப் பாதுகாப்புச் சபையின் 11 நாடுகள் ஆதரித்திருக்கின்றன; பிரிட்டனும்-பிரான்சும் நடுநிலைமை வகித்தன; இரஷ்யாவும் – போலந்தும் எதிர்த்து வாக்கு அளித்தன; இதனையடுத்து இரஷ்யா, தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தியது.

கடந்த ஒரு வாரத்திற்குள் இந்தியாவுக்குச் சாதகமாக இரஷ்யா இரண்டாவது தடவையாக 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தியது.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 2002 கார்த்திகை 28 (14—12—71) செவ்வாய்

நாடு காக்கும் பணி :

அண்ணா அன்று விடுத்த அன்பழைப்பு

"வீடு இருந்தால்தானே ஓடு மாற்ற முடியும்? வீட்டுக்கே அல்லவா ஆபத்து வந்திருக்கிறது!

"நான் அரசியலில் 'பால பாடம்' போதிப்பதாக யாரும் கருதிவிட வேண்டாம்; இந்த நேரத்தில் ஒன்றை விளக்க விரும்புகிறேன்.

"கட்சி என்பது ஒன்று – அரசு என்பது மற்றொன்று; நாடு என்பது வேறு.

"கட்சி இன்று இருந்து நாளை மறையலாம்; அரசு நிரந்தரமானதாக இருக்கலாம்.

"இன்று – அரசை காங்கிரசுக் கட்சி நடத்திக் கொண்டிருக்கிறது; நாளை – மக்கள் பேராதரவைப் பெற்றால் முன்னேற்றக் கழகத்திடம் அரசு வந்துவிடக்கூடும்.

"அரசையும் மீறியது நாடு; அதற்கு ஆபத்து என்றால், உடனடியாகத் தடுத்து நிறுத்துவது நாட்டு மக்களின் பொதுக் கடமையாகும்.

"காங்கிரசு மீதுள்ள கோபத்தில் நாட்டைக் காப்பாற்றும் பிரச்சினையில் நமது தோழர்கள் தவறு இழைத்துவிடக் கூடாது.

"இந்த அரசு இவர்களுக்குத்தானா சொந்தம்? இப்பொழுது அரசியலில் இதே நிலை நீடித்து இருந்துவருமானால், ஆட்சி தி.மு. கழகத்திடம் வராது என யார் சொல்ல முடியும். இரண்டு ஆண்டுகளுக்குமுன் கேரளம், கம்யூனிஸ்டுக் கேரளமாக மாறியிருக்கவில்லையா?

"எனவே, ஆட்சியின்மீது கோபித்துக்கொண்டு நாட்டை விட்டுவிடக் கூடாது.

"கதவைச் சாத்தும்போது, இடுக்கிலே அகப்பட்ட விரலைக் கதவு நசுக்கிவிட்டது என்றால், உடனே கதவுமீது கோபித்துக்கொண்டு அதைச் சாத்தாமல் விட்டுவிடமாட்டார்கள்; அப்படியே திறந்துபோட்டு விட்டால், வழியிலே போகும் நாயெல்லாம் உள்ளே நுழைந்துவிடும்.

"எனவே ஆட்சியாளர்கள் இதுவரை நமக்கு இழைத்துள்ள கொடுமைகள் – அநீதிகளையெல்லாம் மன்னிப்போம் -- மறப்போம்!

"நமது கோட்டைக்குள் எதிரிகள் நுழைய முடியாதவாறு கதவை நன்றாகத் தாளிட்டுக்கொள்ள வீரசபதம் எடுத்துக் கொள்ளுவோம்."

1962-ல் சீனப் படையெடுப்பு நிகழ்ந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் நமது கழகத் தோழர்கட்கு வழங்கிய அறிவுரையே மேலே எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அப்போது நாம் எதிர்க் கட்சியாக இருந்தோம்; பிளவுபடாத காங்கிரசு ஆளுங் கட்சியாக மத்தியிலும்--மாநிலத்திலும் இருந்தது என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

விலைவாசிப் போராட்டத்தில் அடக்குமுறைக் கொடுமைகளை ஏற்றுச் சிறைசென்று மீண்ட நேரத்தில் அண்ணா அவர்கள் இந்த அறிவுரையை வழங்கினார்கள்.

அடக்குமுறையால் ஏற்ற விழுப்புண்கள் ஆறுவதற்கு முன்பே, ஆட்சியாளர்கள்மீது ஏற்படக்கூடிய ஆத்திரத்தைத் தணித்துக் கொள்ளும்படி--மறந்து மன்னித்துவிடும்படிக் கூறிவிட்டு அண்ணா அவர்கள் போர்ப் பிரசாரத்தில் ஈடுபட்டார் என்பது நினைவுகூரத்தக்கது.

அப்போது (1962-ல்) அண்ணா அவர்கள் கூறிய தீர்க்கதரிசனம் 1967-ல் பலித்தது; மக்கள் பேராதரவைப் பெற்றுத் தி. மு. கழகம் ஆளுங் கட்சியாயிற்று; அடக்குமுறைகளை ஏவிக் கொடுமைப்படுத்திய காங்கிரசுக் கட்சி எதிர்க் கட்சியாக வீழ்ச்சியுற்றது.

மேலும் அண்ணா அவர்கள் அப்போது அனைத்துக் கட்சியினருக்கும்--பொதுமக்களுக்கும் விடுத்த வேண்டுகோளை இந்த நேரத்திலும் நினைவுகொள்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதி அதனையும் கீழே தந்துள்ளோம் :-

"இந்த யுத்தத்தை வெறும் பீதி கிளப்பக்கூடிய நிலையில் துவக்கப்பட்டதாக நான் எண்ணவில்லை; இது தீவிரமான படையெடுப்பாகும்.

"எனவே, எல்லா அரசியல் கட்சிகளும் தங்களுடைய வழக்கமான நடவடிக்கைகளை ஒதுக்கிவைத்துக்கொள்ள வேண்டும்.

"போரில் எதிரியை முறியடிக்கும் காரியத்தில் எல்லோரும் ஈடுபட வேண்டும்.

"இப்படி மேல்நாடுகளிலெல்லாம் நடப்பது உண்டு; இதற்கு Moratoriem' என்று சொல்லுவார்கள்.

"பட்டாளத்தில் சேர முடிந்தவர்கள் சேருங்கள்! பண உதவி அளிக்க முடிந்தவர்கள் அளியுங்கள்! போர்ப் பீதி ஏற்படாமல் மக்களுக்குத் தெளிவூட்டக்கூடியவர்கள் அதைச் செய்யுங்கள்!"

ஆஸ்தான வித்வான்கள்

ஆலயங்களில் நியமிக்க யோசனை

சென்னை, டிச. 11—

"தமிழ்நாட்டிலுள்ள பழனி போன்ற பெரிய கோவில்களில் 'ஆஸ்தான' வித்வான்கள் நியமிக்கப்படுவார்களா? திருப்பதி கோவிலில் இவ்வாறு ஆஸ்தான வித்வானாக லதா மங்கேஷ்கர் நியமிக்கப்பட்டுள்ளார்; அதேபோல், தமிழகத்தில் உள்ள பெரிய முக்கிய கோவில்களிலும் புகழ்பெற்ற வித்வான்களை ஆஸ்தான வித்வான்களாக நியமிக்கும் எண்ணம் உண்டா?"

என்று சட்டப் பேரவையில், திருமதி டி.என். அனந்தநாயகி (சிண்டிகேட்) கேட்டார்.

முதலமைச்சர் :—"பணம் வாங்காமல் ஆஸ்தான வித்வான்களாகப் பணியாற்ற வித்வான்கள் முன்வருவார்களேயானால் அவர்களைக் கோவில்களில் ஆஸ்தான வித்வான்களாக நியமிப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்."

மிருகக் காட்சிச்சாலை

கிண்டிக்கு மாற்றப்படலாம்

சென்னை, டிச. 12—

"சென்னை மிருகக் காட்சிச் சாலையை இடம் மாற்றி, கிண்டி தோட்டத்திலாவது அல்லது வண்டலூர் தோட்டத்திலாவது வைக்கலாம் என்று யோசனை சொல்லப்பட்டது; வண்டலூர் சற்றுத் தொலைவில் இருப்பதால், கிண்டி தோட்டத்திற்குச் சென்னை மிருகக் காட்சிசாலையை மாற்றுவது குறித்து அரசு விரைவில் பரிசீலித்து முடிவு எடுக்கும்"

என்று அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சட்டப் பேரவையில் தெரிவித்தார்; அவர் மேலும் தெரிவித்ததாவது :—

"சென்ட்ரல் இரயில் நிலையத்தில், எஞ்சின்களிலிருந்து வெளியேறும் புகையின் காரணமாக மிருகக் காட்சிச் சாலையில் உள்ள பல மிருகங்கள், நுரையீரல் கோயினால் பாதிக்கப்பட்டன.

"மிருகக் காட்சிச் சாலையை வேறிடத்திற்கு மாற்றுவதானால், 100 ஏக்கர் முதல் 150 ஏக்கர் வரையில் நிலம் கிடைக்க வேண்டும்."

தமிழகத் தாய்க்குலம் திரண்டெழுந்தது

'எதிரியை முறியடிக்க எத்தகைய தியாகத்துக்கும் தயார்' என சூளுரை

தலைநகரில் மாபெரும் மகளிர் பேரணி -- பொதுக்கூட்டம்

சென்னை, டிச. 13—

"பாகிஸ்தான் படையெடுப்பிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றுகின்ற முயற்சியில் தலைமையமைச்சர் இந்திரா காந்தியின் கரங்களுக்கு முழு வலிமையும் தருவோம்; நாட்டைக் காப்பாற்ற எவ்விதத் தியாகங்களுக்கும் தயாராவோம்" என்று சென்னை நகரில் கூடிய மகளிர் பேரணி சூளுரைத்தது.

பாகிஸ்தான் படையெடுப்பைக் கண்டிப்பதற்கும்—அரசு எடுக்கும் போர் முயற்சிகளுக்கு பேராதரவு தெரிவிக்கவும் சென்னை நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மாலை எழுச்சிமிக்க மகளிர் பேரணி நடைபெற்றது.

எத்திராஜ் பெண்கள் கல்லூரியிலிருந்து புறப்பட்ட இந்த மகளிர் பேரணிக்கு அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் தலைமை தாங்கினார்.

தமிழக ஆளுநரின் துணைவியார் மதுபென் ஷா, திருமதி தயாளு கருணாநிதி, அண்ணியார் இராணி அம்மையார், மற்றும் தமிழக அமைச்சர்களின் துணைவியர், சட்டமன்றத் தலைவர் -- மேலவைத் தலைவர் ஆகியோரின் துணைவியர், மேயர் காமாட்சி செயராமன், மற்றும் அதிகாரிகள் -- தலைவர்களின் துணைவியர் பேரவையில் கலந்துகொண்டு வந்தனர்.

திருமதி அலமேலு அப்பாதுரை உள்ளிட்ட பலர் முன்வரிசையில் பதாகைகளைத் தாங்கிவந்தனர்.

எத்திராஜ் -- ஸ்டெல்லா மேரிஸ் -- ஒய்.எம்.சி.ஏ. -- இராணிமேரி -- நேஷனல் டிரெயினிங் -- எஸ் ஐ.ஈ.டி. -- லேடி வெலிங்டன் -- அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி -- வைஷ்ணவப் பெண்கள் கல்லூரி மாணவியரும், இராசாமணி மகளிர் மன்றம், பட்டினப்பாக்கம் மகளிர் மன்றம், சீரணிப் பெண் தொண்டர்கள், வட சென்னை மகளிர் மன்றம், இராயப்பேட்டை மகளிர் மன்றம், தாய்–சேய் நல மருத்துவமனை தாய்மார்கள் சங்கம், அபய நிலையம், மருத்துவப் பணிப் பெண்கள் -- மருத்துவத் துறை கடைநிலைப் பெண் ஊழியர்கள், சென்னை சேவா சதனம், பாலசேவிகா டிரெயினிங் சென்டர் ஆகியவற்றைச் சேர்ந்த பெண்டிரும்;—எம். சி. டி. பெண்கள் உயர்நிலைப் பள்ளி -- சிந்தாதிரிப்பேட்டை கல்யாண் மகளிர் உயர்நிலைப் பள்ளி -- என்.கே.டி. தேசிய பெண்கள் உயர்நிலைப் பள்ளி -- கில்ட் ஆப் சர்வீசு சேவா சதன் -- செயின்ட் அந்தோணி கான்வென்ட்--இராயப்பேட்டை வெங்கடேசுவரா மெட்ரிகுலேஷன் பள்ளி -- செயின்ட் எப்பாஸ் பெண்கள் பள்ளிகளைச் சார்ந்த பெண்களும், சிறுமிகளும், ஆசிரியைகளும், வேறு பல பள்ளியைச் சேர்ந்தோரும்;—பர்தா அணிந்த முஸ்லிம் பெண்கள் பலரும், ஆசிரியைகள் -- நர்சுகள் -- ஊர்க் காவல் படையைச் சேர்ந்த பெண்கள், அலுவலகத்தில் வேலைபார்க்கும் மகளிர், குடும்பத் தலைவிகள் -- என, இவ்வாறு சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் ஊர்வலத்தில் கலந்துகொண்டு பாகிஸ்தானைக் கண்டித்து உணர்ச்சிமிக்க முழக்கங்களை எழுப்பினர்.

ஊர்வலத்தின் முதலும்--முடிவும் அண்ணா சிலையைக் கடந்து செல்ல சரியாக ஒரு மணி நேரம் பிடித்தது.

பேரணி சென்ற வழிகளின் இருமருங்கும் பல்லாயிரக்கணக்கானோர்கூடி நின்று, வாழ்த்தினர்.

கலைவாணர் அரங்கில் சென்று முடிந்த பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கண்டன மகளிர் பேரணி கூட்டத்திற்குத் தமிழக ஆளுநர் துணைவியார் திருமதி மதுபென் ஷாவை தலைமை தாங்குமாறு திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் முன்மொழிந்ததை - திருமதி தயாளு கருணாநிதி வழிமொழிந்தார்.

திருமதி மதுபென் ஷா

"நாட்டைக் காக்க எவ்வித தியாகத்துக்கும் தாய்க்குலம் தயாராக இருக்க வேண்டும்; பெண்களை மதியாத பாகிஸ்தான் இன்று உலக அரங்கிலே உதாசினப்படுத்தப்படுவதில் ஆச்சரியமில்லை; பாகிஸ்தானின் போர் வெறியை ஒடுக்க எழுச்சிகொண்டு நிற்கும் நமது வீரமறவர்களுக்கு உடைகள் தைத்து அனுப்புதல் போன்ற வகையில் நாம் உதவத் தயங்கக்கூடாது"

என்று தனது தலைமை உரையில் திருமதி மதுபென் ஷா குறிப்பிட்டார்.

மேயர் காமாட்சி செயராமன்

மேயர் காமாட்சி செயராமன் பேசுகையில், 'வங்க தேசப் பிரச்சினையில் நம் தலைமையமைச்சர் மேற்கொள்ளுகின்ற ஒவ்வொரு நடவடிக்கையும் வெற்றிபெற நாம் ஒத்துழைக்க உறுதிபூண வேண்டும்; கண் துஞ்சாமல் -- பசி நோக்காமல் களத்திலே நின்று நாடு காக்கும் கடமையாற்றும் குடும்பங்களுக்கு நாம் பெரிதும் உதவவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

ஜோதி வெங்கடாசலம்

"பாகிஸ்தானத்தின் இரத்த வெறி தணிக்க நம் வீரர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துவோம்" என்று திருமதி ஜோதி வெங்கடாசலம் குறிப்பிட்டார்.

அலமேலு அப்பாதுரை

"அவசியமானால் போர்முனைக்குப் போக நாமும் தயாராக இருக்கவேண்டும்"

என்று மகிழ்ச்சி ஆரவாரத்தினிடையே திருமதி அலமேலு அப்பாதுரை குறிப்பிட்டார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து

இறுதியில் அரிசன நலத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சனநாயகத்தை மதிக்காத யாகியா கான், முஜிபுர் ரகிமானை கொடுமைச் சிறையில் தள்ளினார்; அவரை ஆதரித்தவர்களைச் சித்திரவதைப்படுத்தினார்.

அந்தக் கொடுமை தாளாமல், 'அபயம்' என்று இங்கே வந்தவர்களுக்கு அபயமளித்தார் -- அன்பே உருவான இந்திரா -- இது தவறா?

வங்கத்துப் பெண்களின் கற்பைச் சூறையாடும் கயவர்களின் கொடுமை தாளாமல் எண்ணற்ற பெண்கள் அங்கே தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

கற்புடைய மகளிர் நினைத்தால், யாகியா கான் என்ன -- அவர்கள் பட்டாளமேவந்தாலும் தாள் தூள் ஆகிவிடும் என்பதை நாம் உணர்த்த வேண்டும்.

நாட்டுப் பாதுகாப்புக்கு எல்லையிலே தொல்லை பாராமல் கடமையாற்றும் படை வீரர்களுக்கு உதவி -- அவர்களுடைய குடும்பத்தை நம் குடும்பம் போல் கண்காணிக்க நிதித் திரட்டித் தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

போர்க்களத்திலே வீர மரணம் அடைந்த நம் இராணுவ வீரர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலே கூட்டத்தினர் எழுந்து நின்று சில நிமிட மௌனம் கடைபிடித்தனர்.

பின்னர் அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், ஒரு உறுதிமொழியைப் படிக்க -- கூட்டத்தினர் எழுந்து அதை உணர்ச்சி பொங்கிடத் தாங்களும் திரும்பக் கூறினர்; அந்த உறுதிமொழி வருமாறு :—

"கிழக்கு வங்க மக்கள் சனநாயக ரீதியில் அளித்த தீர்ப்பை மதிக்காமல் அந்த மக்களை இராணுவத்தைக் கொண்டு கொன்று குவித்து, இந்தியாவுக்கு அவர்களில் எண்ணற்றோரை அநாதரான நிலையிலே அனுப்பிய தோடு நம்நாட்டின்மீது படையெடுத்திடவும் துணிந்த பாகிஸ்தானுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் உலகத்தில் -- உலகத்துத் தாய்க்குலத்தின் வீரத்தையும், பரிவு பாசங்களையும் பிரதிபலிப்பவரான இந்தியத்தலைமை அமைச்சர் திருமதி இந்திரா எடுக்கும் எல்லாவகை முயற்சிக்கும் ஆதரவளிக்கவும் -- எவ்விதத் தியாகத்தைச் செய்யவும் --இந்தியாவுக்கு வெற்றி தேடித் தருவதில் தமிழகச்சுதுத் தாய்மார்களாகிய நாம் முன்னணியில் நிற்க உறுதி பூணுவோம்."

கூட்டத்தில் பாதுகாப்பு நிதிக்கெனப் பலர் நிதி வழங்கினர்; எண்ணற்றோர் இரத்த தானம் செய்வதாக வாக்களித்தனர்.

போர்க் கைதிகள்

ஜெனிவா கோட்பாட்டின்படி நடத்தப்படுவர்

புதுடில்லி, டிச. 14—

போரில் காயமடைந்த வீரர்களையும் -- நோய்வாய்ப்பட்ட வீரர்களையும் போர்க் கைதிகளாக நடத்துவது தொடர்பாகவும், சிவிலியன்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது தொடர்பாகவும் இந்திய அரசு தொடர்ந்து எல்லா ஜெனிவா கோட்பாடுகளையும் கடைபிடிக்கும் என்று மீண்டும் உறுதி கூறியிருக்கிறது.

புதுடில்லியில் அரசு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், 'பாகிஸ்தானிப் படையினர் போர்க் கைதிகளாக மேற்கொள்ளப்படும்போது கண்ணியத்துடனும் -- மனிதத் தன்மையுடனும் நடத்தப்படுவார்கள்' என்று நமது தரைப் படைத் தலைவர் பலமுறை உறுதி கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஐ. நா. தலைமைச் செயலாளர் அண்மையில் விடுத்த கோரிக்கையை அடுத்து, இந்திய அரசு இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

அனைத்து நாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்துடனும் -- செஞ்சிலுவைச் சங்கங்களின் லீகுடனும் இந்திய அரசு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது என்றும், அவற்றின் மனிதாபிமானப் பணியில் முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.

குதிரைப் பந்தயம்மூலம் பாதுகாப்பு நிதி

சென்னை, டிச. 13—

நேற்று நடைபெற்ற கிண்டி குதிரைப் பந்தயத்தின் மூலம் கிடைத்த வருவாய் முழுவதையும் நாட்டுப் பாதுகாப்பு நிதியில் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், குதிரைகளின் சொந்தக்காரர்கள் -- ஜாக்கிகள் -- மற்றும் குதிரைப் பந்தயக் கழக ஊழியர்கள் சார்பில் வசூலிக்கப்பட்ட நன்கொடைமூலம் கிடைத்த ரூ. 1,15,000-மும் பாதுகாப்பு நிதியில் சேர்க்கப்படும்.

குறைந்த கட்டணத்தில் மின்சார வசதி-தமிழ்நாட்டில் மட்டுமே தரப்படுகிறது

ஆண்டுக்கு 60,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு

விரிவுபடுத்தப்பட்ட துறையில் 25,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு

தூத்துக்குடி--நெய்வேலியில் அனல் மின்சார நிலையம் ஏற்படுத்த மத்திய அரசிடம் வலியுறுத்தல் -- மேலவையில் அமைச்சர் ஓ. பி. இராமன் விளக்க உரை

சென்னை, டிச. 12—

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971–72-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை--1970-71-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையின்மீது நடந்த விவாதத்திற்கு மேலவையில் மின்சார அமைச்சர் ஓ பி. இராமன் அவர்கள் பதில் அளித்துப் பேசுகையில் கூறியதாவது :—

"தமிழ்நாடு மின்சார வாரியம், இன்று மற்றவர்கள் பாராட்டுகின்ற அளவில் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது.

1972-ம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் எல்லா இடங்களுக்கும் மின்சாரம் கொடுக்கவேண்டும் என்ற விரைவுத் திட்டத்தைச் செயல்படுத்தும் முறையில் நாம் வெற்றியும் கண்டிருக்கிறோம்.

இதுவரை 4 மாவட்டங்களில் முழுவதும் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது; 3 மாவட்டங்களில் முடியும் நிலையில் இருக்கிறது; இதற்கான வேலையில் மின்சார வாரியம் விரைவாகச் செயல்பட்டு வருகிறது.

காங்கிரசு ஆட்சிக் காலத்தில் 20 ஆண்டுகளில் பம்பு செட்டுகட்குக் கொடுத்த மின் இணைப்பைவிட, நாம் கடந்த 4 ஆண்டுகளில் அதிகமான பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறோம்.

இப்போது ஆண்டுக்கு 60,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுகிறது.

இப்போதுள்ள சூழ்நிலையில் நாம் எதிர்காலத்தில் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட பம்பு செட்டுகளுக்கு மின் வசதி செய்து கொடுக்க முடியும்

கடந்த 4 ஆண்டுகளில் நாம் ஏராளமான அரிசன காலனிகளுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறோம்.

அரிசன காலனிகளுக்கு மின்சாரச் செலவிற்காக தமிழக அரசு ரூ. 20,94 400 கொடுத்திருக்கிறது.

நாம் மற்ற மாநிலங்களைப்போல் அல்லாமல் அதிகச் செலவு செய்து பெற்ற மின்சாரத்தைக் குறைந்தக் கட்டணத்தில் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கிறோம்; எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் நமது மாநிலத்தில்தான் உழவர்கட்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கிறோம்.

கடந்த 4 ஆண்டுக் காலமாக இந்தத் துறை விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது; இதன் காரணமாக 25 000 பேர் வேலை வாய்ப்பு பெற்று உள்ளனர்.

தனியார் மின்சார நிறுவனங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ள ஏன் தாமதம் ஆகிறது என்று பலர் கேட்டார்கள்; இப்போது தனியார் நிறுவனங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ள நல்ல சூழ்நிலை இருக்கிறது; விரைவில் தனியார் நிறுவனங்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.

நமது மாநிலத்திற்கு மின்சாரத் தேவை போதவில்லை; அதற்காக மத்திய அரசிடம் பல திட்டங்களை வற்புறுத்தி வருகிறோம்.

தூத்துக்குடி, நெய்வேலி ஆகிய இடங்களில் அனல் மின்சார நிலையங்களை விரைவில் ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசிடம் இந்த சபையின் சார்பில் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்."

கூடுதல் வரி விதிப்புக்கான மசோதாக்கள்

சென்னை, டிச. 13—

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை முன்னிட்டு கூடுதல் நிதி வசதி கோரும் இரு மசோதாக்கள் இன்று சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்டது.

முத்திரைப் பத்திரத் தாள் சட்டத் திருத்த மசோதாவையும், பந்தயம் -- கேளிக்கை வரித் திருத்த மசோதாவையும் அமைச்சர் ப. உ. சண்முகம் தாக்கல் செய்தார்.

மூடப்பட்ட பத்திரிகை பற்றி

ஒத்திவைப்புத் தீர்மானம்

சட்டப் பேரவையில் அனுமதி மறுப்பு

சென்னை, டிச. 13—

'சுதேசமித்திரன்' நாளிதழ் மூடப்பட்டதால், உழைக்கும் பத்திரிகையாளர்கட்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கச் சட்டப் பேரவையின் நிகழ்ச்சி நிரலை ஒத்திவைக்க வேண்டும் -- என்று கோரி எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடாரும், திருமதி அனந்தநாயகியும் இன்று கொண்டுவந்த தீர்மானம், தொழிலாளர் நல அமைச்சர் திரு.என்.வி. நடராசன் அவர்களின் விளக்கத்துக்குப் பின், பேரவைத் தலைவரால் அனுமதி மறுக்கப்பட்டது.

"நிதிநிலை நெருக்கடி காரணமாக மூடப்பட்ட 'சுதேசமித்திரன்' பத்திரிகை அலுவலகம், இத்திங்கள் 22-ஆம் நாளுக்குப் பிறகு, பாங்கியிடமிருந்து கடன் கிடைத்ததும் திறக்கப்படும்"

என்று, அமைச்சர் என். வி. நடராசன் தெரிவித்தார்.

போர் வீரர்களுக்கான வசதிகள் -- வழங்கத் தமிழகத்தில் 4 குழுக்கள்

சென்னை, டிச. 12—

துருப்புக்களுக்கு வசதிகள் சம்பந்தமான அலுவல்களைக் கவனிப்பதற்காக நான்கு குழுக்களைத் தமிழக அரசு அமைத்திருக்கிறது.

இராணுவத்துக்குப் பயன்படும் பொருள்களைத் திரட்டி அனுப்பும் பொறுப்பை ஒரு குழு வகிக்கும்.

இரண்டாவது குழு -- துருப்புக்களின் குடும்பங்கள் நலனைக் கவனிக்கும்.

மூன்றாவது குழு -- போர் முனைக்குச் செல்லும் வீரர்களுக்கு இலவசமாகச் சிற்றுண்டியும் -- காபியும் வழங்குவதற்காகச் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் சிற்றுண்டி விடுதி நடத்தும்.

நான்காவது குழு -- மருத்துவ உதவியை அளிக்கும்; குருதிக் கொடைக்கு ஏற்பாடு செய்யும்.

அந்தக் குழுக்களின் விவரமும் -- அதில் இடம் பெற்றுள்ளவர்கள் விவரமும் வருமாறு :—

இராணுவ வீரர்களுக்குப் பரிசுப் பொருட்களைத் திரட்டி அனுப்பும் குழு.

தயாளு கருணாநிதி :—தலைவர்.

திருமதி விலாசினி சண்முகம் :—துணைத் தலைவர்.

திருமதி சம்பாவதி வெங்கடாசலம் :—அமைப்பாளர்.

இராணுவ வீரர்களின் குடும்ப நலனைக் கவனிக்கும் குழு :—

பிரிகேடியர் எஸ் கேசவலு :—தலைவர்.

திருமதி இராசசுந்தரி மதியழகன் :—துணைத் தலைவர்.

திருமதி காந்தா ஏகாம்பரம் :—அமைப்பாளர்.

போர்முனைக்குச் செல்லும் இராணுவ வீரர்களுக்குச் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் இலவசமாகக் காபி, சிற்றுண்டி வழங்குவதற்கான குழு :—

திருமதி கிளப்வாலா ஜாதவ் :—தலைவர்.

திருமதி அலமேலு அப்பாதுரை :—துணைத் தலைவர்.

திருமதி சுசீலா இராசேந்திரன் :—அமைப்பாளர்.

இராணுவத்தினருக்கு மருத்துவ உதவி மற்றும் இரத்தம் சேகரித்தல் ஆகியவற்றைக் கவனிக்கும் குழு :—

திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் :—தலைவர்.

திருமதி சபாநாயகம் :—துணைத் தலைவர்.

டாக்டர் சனார்த்தனன் :—அமைப்பாளர்.

பாதுகாப்பு வசதிகள் குழு

மாநிலம் பாதுகாப்பு வசதிகள் குழு ஒன்றையும் அரசு அமைத்திருக்கிறது; சென்னையில் உள்ள முப்படைத் தளபதிகள் இக்குழுக்களில் உள்ளனர்; அரிசன நலத் துறை அமைச்சர் இக்குழுவின் தலைவராவார்.

'இராவணனை இழிவுபடுத்தும் செயல் தடுக்கப்படுமா?'

'இராவண காவியத்தைப் பாட நூலாக்கும் திட்டம் உண்டா?'

சட்டப் பேரவையில் வினா -- முதலமைச்சர் விளக்கம்

சென்னை, டிச. 14—

"கடந்த மே மாதத்தில் தடை நீக்கம் செய்யப்பட்ட 'இராவண காவியம்' நூல் கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் பாட நூலாக வைக்கப்படுமா?"

என்று சட்டப் பேரவையில், உறுப்பினர் ஏ. சாமிதாஸ் கேட்டார்.

முதலமைச்சர் கருணாநிதி :—"பாடத் திட்ட நூல்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அதற்காக இருக்கும் குழுவைச் சேர்ந்தது; இக்குழுவினரின் பாடத் திட்ட நூல் தேர்வினை மறு ஆய்வு செய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது; 'இராவண காவியம்' கல்லூரிகளிலோ -- பள்ளிக்கூடங்களிலோ பாட நூலாகத் தேர்ந்தெடுக்கப்படுவது இந்தக் குழுவின் முடிவைப் பொறுத்தது."

சு. துரைசாமி (தி. மு. க.) :—"இராவணனை இழிவுபடுத்தும் பிரச்சாரம் நடைபெறுகிறதே -- இதைத் தமிழக அரசு தடைச் செய்யுமா?"

முதலமைச்சர் கருணாநிதி :—"தடை செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லை."

சு. துரைசாமி :—"இராமனை இழிவு செய்யக்கூடாது என்று தடை செய்யப்படுகிறது; ஆகவே, ஒருசாரார் இராவணனை இழிவுபடுத்தித் தலையை வாங்கும் செயல் தடை செய்யப்படுமா?"

முதல்வர் :—"உறுப்பினர் டில்லியில் நடைபெறும் 'இராம லீலா'வை மனதிற்கொண்டு இவ்வாறு கேட்பதாக நினைக்கிறேன்; டில்லியில் நடைபெறும் 'இராம லீலா'வுக்குத் தடை விதிக்க நமக்கு அதிகாரம் இல்லை."

சுரேந்திரன் (சோச) :—"'இராம காவியம்' -- 'இராவண காவியம்' எல்லாம் வெறும் கதைகள் தான்; இவற்றைக் கல்வி நிலையங்களில் பாட நூலாக வைப்பது அவசியந்தானா?"

முதல்வர் :—"கல்வி நிலையங்களில் மாணவர்கள் நல்ல கதைகளைப் பாட நூலாகப் படிப்பதில் தவறில்லை."

துரை முருகன் (தி.மு.க.) :—"வட நாட்டில் இராவணன் உருவம் செய்து கொளுத்தப்படுவதால் தென்னாட்டினரில் பலர் மனம் புண்படுகிறது; எனவே, இராவணனை வட நாட்டில் இழிவு செய்வதற்குத் தடை விதிக்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்தப்படுமா?"

முதல்வர் :—"உறுப்பினரின் இந்த உருக்கமான கேள்வி மத்திய அரசுக்குச் செல்லும்."

ஏ. எம். இராசா (தி. மு. க.) :—"இலங்கையில் இராவணனின் உடலைத் தேடுவதாக செய்தி வந்துள்ளது; தமிழ் நாட்டினருக்கு வாலிதான் முக்கியம்; எனவே, வாலியின் உடலைத் தேடவும் -- வாலி காவியம் இயற்றப்படவும் ஏற்பாடு செய்யப்படுமா?"

முதல்வர் :—"இவை இரண்டுமே இராமாயணம்தான்."

தமிழ்நாடு அரசு செய்திப் படம்

மத்திய அரசு தணிக்கைக் குழு தடை விதித்ததேன்?

சட்டப் பேரவையில் கேள்வி--முதல்வர் கலைஞர் பதில்

சென்னை, டிச. 12—

"தமிழ்நாடு அரசு செய்தித்துறையினர் தயாரித்துள்ள செய்திப் படம் ஒன்றைத் திரையிட மத்திய அரசின் தணிக்கைக் குழு அண்மையில் தடை விதித்ததா? விவரம் என்ன?"

என்று சட்டப்பேரவையில், கழக உறுப்பினர் திரு. கணேசன் வினவினார்.

முதல்வர் :— "தடை விதிக்கவில்லை; ஆனால் ஒரு செய்தி மலரில் விளக்க உரையில் இருந்த சொற்றொடர் ஒன்றுக்கும்—மற்றொரு செய்தி மலரில் இருந்த காட்சி ஒன்றுக்கும் தணிக்கைக் குழு மறுப்புத் தெரிவித்தது.

கணேசன் :— "மறுப்புத் தெரிவித்த காட்சி பற்றி விளக்க முடியுமா?"

முதல்வர் :—"காவிரி நீர்ப் பங்கீடு பற்றி கோட்டையில் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், மத்திய அரசு, 'காலம் கடத்துவது' பற்றி ஆராய சர்வ கட்சிக் கூட்டம்—என்ற வார்த்தையை நீக்குமாறு கூறினார்கள்; 26—6—71-ல், நடைபெற்ற காவிரி நீர்ப் பங்கீடு பற்றிய அனைத்துக் கட்சிக் கண்டனக் கூட்டம் -- காட்சிகளுக்கும் தடை விதிக்கப்பட்டது."

இராமசாமி :— "உண்மைக்குத் தடை விதித்ததால், இது பற்றி மத்திய அரசின் தணிக்கைக் குழுவிடம் வலியுறுத்திச் சேர்த்து அதனை வெளியிடுமா?"

முதல்வர் :— "நாம் எவ்வளவு வலியுறுத்தியும் அவர்கள் பிடிவாதம் காட்டுகிறார்கள்; அதற்காகக் காத்திராமல் செய்திப் படம் வெளியிடப்பட்டுவிட்டது."

திருமண வயது

மத்திய அரசு யோசனைக்கு தமிழகம் ஒப்புதல்

சென்னை, டிச. 14—

"திருமணம் செய்துகொள்ளும் வயதைப் பெண்களுக்கு 18-ஆகவும், ஆண்களுக்கு 21-ஆகவும் உயர்த்துவது குறித்து மத்திய அரசு யோசனை கேட்டது; இதற்குத் தமிழக அரசு ஒப்புதல் தெரிவித்துள்ளது"

என்று சட்டப் பேரவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள் கூறினார்.

"திருமணம் செய்து கொள்வதற்கு ஆணுக்கும் -- பெண்ணுக்கும் குறைந்தபட்ச வயது நிர்ணயிக்கும் திட்டம் ஏதும் இல்லை" என்றும் அவர் சொன்னார்.

பிடிபட்ட பாகிஸ்தானிகள் உயிருடன் திரும்ப....

பாகிஸ்தானுக்கு வங்க தேசம் விதிக்கும் நிபந்தனை

ஜெஸ்சூர், டிச. 13—

ஷேக் முஜிபுர் ரகிமானைப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளரிடமிருந்து விடுவிப்பதற்கு ஒரே வழிதான் இருக்கிறது; வங்க மக்களே -- இப்போது வங்க தேசத்தில் உள்ள பாகிஸ்தான் துருப்புகள் அனைவரையும் உயிரோடு சிறை செய்யுங்கள்; அதைக் கொண்டு நமது எண்ணத்தை நாம் சாதிக்கமுடியும்; 'வங்கபந்து' ஷேக் முஜிபுர் ரகிமானை விடுவித்தால்தான், இந்தத் துருப்புகளை உயிருடன் அனுப்ப முடியும் -- என்று யாகியா கானிடம் சொல்வோம்; நமது, 'வங்கபந்து'வை விடுவிப்பதற்கு, உள்ள ஒரே வழி இதுதான்"

என்று வங்க தேசத்தின் தலைமையமைச்சர் தாசுதீன் அகமது இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அரசு ஊழியர்கட்குப் போர்ப் பயிற்சி

என். ஜி. ஓ. சங்கக் கோரிக்கை

சென்னை, டிச. 13—

அரசு ஊழியர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்தால் நெருக்கடி நேரத்தில் அவர்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சேலத்தில் கூடிய அரசிதழ் பதிவு பெறாத ஊழியர் சங்கக் குழுக் கூட்டம் யோசனை கூறியது. அரசு ஊழியர்கட்கு போர்ப் பயிற்சி அளிக்கும்படியும் அது வேண்டுகோள் விடுத்துள்ளது.

1974-ல் சென்னைக்கு வீராணம் நீர்

நாள்தோறும் 4-கோடி காலன் கிடைக்கும்

சென்னை, டிச. 14—

"சென்னை நகருக்குக் குடிநீர் வழங்க வகை செய்யும் வீராணம் திட்டம் 1974-ஆம் ஆண்டு மத்தியில் முடிவடையும்; இத்திட்டத்தின்மூலம் சென்னை நகருக்கு நாள் ஒன்றுக்கு 4-கோடி காலன் தண்ணீர் கிடைக்கும்; இத்திட்டத்துக்கு மொத்தம் ரூ. 21 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது"

என்று சட்டப் பேரவையில் என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

அவர் மேலும் துணைக் கேள்விகளுக்குப் பதிலளித்ததாவது:—

"கிருஷ்ணா – கோதாவரி நீர்ப் பங்கீட்டு ஆணைக் குழு தமிழ் நாட்டுக்கு 1,500 கோடி கன அடி தண்ணீர் வழங்கலாம் எனப் பரிந்துரைத்துள்ளது; இதில் 500 கோடி கன அடி நீரை சோமசீலா திட்டத்தின் மூலம் தமிழகத்திற்குத் தர ஆந்திர அரசு ஒப்புக்கொண்டுள்ளது; இதற்காகும் செலவில் ஒரு பகுதியைத் தர வேண்டும் என்று கேட்டால் அதைத் தமிழ்நாடு மறுப்பதற்கில்லை."

எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை

குண்டு வீச்சிலிருந்து காக்கப்பட்டது

ஆமதாபாத், டிச. 14—

பரோடா அருகே உள்ள குசராத் எண்ணெய்த் துாய்மை ஆலையைத் தாக்க இன்று பாகிஸ்தான் விமானங்கள் முயன்றன.

சாபர் ஜெட் விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது

புதுடில்லி, டிச. 14—

சிந்துப் பகுதியில் நேற்றுகாலை நடைபெற்ற சண்டை ஒன்றில் பாகிஸ்தானின் இரு சாபர் ஜெட் விமானங்களை நமது விமானங்கள் சுட்டுவீழ்த்தியது.

குஷ்டியா மாவட்டத்தில் சிவில் நிர்வாகம்

புதுடில்லி, டிச. 14—

வங்காள தேசத்தில் விடுவிக்கப்பட்ட குஷ்டியா மாவட்டத்தில் வங்காள தேச அரசு, சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் படையினர் முன்னர் நடத்திய போரின்போது தப்பியோடிய குஷ்டியா மாவட்டக் கமிஷனரையே மீண்டும் இப்போது வங்காள தேச அரசு கமிஷனராக நியமித்துள்ளது.

கைத்தறியாளருக்குக் கூலி நிர்ணயம்

மாநில அளவில் பரிசீலனை

சென்னை, டிச. 11—

"கைத்தறி நெசவாளர்கட்குக் கூலி நிர்ணயம் செய்யும் பிரச்சினை, மாநில அளவில் பரிசீலிக்கப்படும்"

என்று சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிற்கு டிராக்டர்கள்

தமிழ்நாட்டுக்கு 200 டிராக்டர்கள் வாங்கப்பட்டிருப்பதாகவும், மேற்கொண்டு 200 டிராக்டர்கள் வாங்க மத்திய அரசு அனுமதியளித்து விட்டதாகவும் வேளாண்மை அமைச்சர் தெரிவித்தார்.

தீண்டாமைக் குற்றத்துக்குக் கடுந் தண்டனை

ஆய்வுக் குழு பரிந்துரை — அமைச்சர் விளக்கம்

சென்னை, டிச. 11—

"தீண்டாமையைக் கடைபிடிப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும் -- என்று தீண்டாமை ஒழிப்புக் குழு (இளைய பெருமாள் குழு) பரிந்துரை செய்துள்ளது; இதன்படி, தீண்டாமையைக் கடைபிடிக்கும் முதல் குற்றத்திற்கு ரூ. 50 அபராதம் -- 3 மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை; இரண்டாம் முறையாக இக்குற்றம் செய்தால் ரூ. 500 அபராதம் -- 6 மாதம் கடுங்காவல்; தொடர்ந்து மூன்றும் தடவையாகக் குற்றம் செய்வோருக்கு ரூ. 1,000 அபராதம் -- ஓராண்டுக் கடுங்காவல் தண்டனை கட்டாயமாக விதிக்க வழி செய்யப்பட்டுள்ளது"

என்று சட்டப் பேரவையில், கேள்வி நேரத்தின்போது அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அறிவித்தார்.

கே. எம். சுப்பிரமணியம் (சிண்டிகேட்) கேட்ட துணைக் கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், 'இப்போது எல்லா மாவட்டங்களிலும் தீண்டாமை சில இடங்களில் பிடிக்கப்படுகிறது' என்று அவர் சொன்னார்.

பஞ்சாபுக்குள் எதிரியின் தகவல் சேகரிப்புக் கருவி

சண்டிகார், டிச. 14—

தாக்குதல் நடத்தத் தகவல் திரட்டும் நோக்கத்துடன், பாகிஸ்தான் விமானப் படை பஞ்சாபில் எங்கோ ஓர் இடத்தில் ஒலியனுப்புக் கருவி ஒன்றைப் போட்டு விட்டுச் சென்றிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் வஞ்சகம்

'பிராவ்தா' கண்டனம்

மாஸ்கோ, டிச. 14—

இந்தியா – பாகிஸ்தான் பிரச்சினையில் அமெரிக்காவின் நய வஞ்சகக் கொள்கையை சோவியத் இரஷ்யாவின் அதிகார பூர்வ ஏடான 'பிராவ்தா' இதழ் கண்டித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதம் வழங்கிவருவதை அது சுட்டிக்காட்டியுள்ளது.

நச்சுக் குண்டு வீச்சு

ஜம்மு, டிச. 14—

வெறிபிடித்த பாகிஸ்தான் விமானப் படை, ஜம்மு பகுதியில் மக்கள் வாழும் பகுதிகள்மீது நச்சு வாயுக் குண்டை வீசியிருக்கிறது.

சீரணியினருக்குத் துப்பாக்கிப் பயிற்சி

சென்னை, டிச. 14—

"சீரணியினருக்குத் துப்பாக்கிச் சுடுவதற்கான பயிற்சி அளிப்பது குறித்து அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்"

என்று சட்டப் பேரவையில், பி.எஸ். மணியன் (தி.மு.க.) கேள்விக்குப் பதிலளிக்கையில், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் கூறினர்.

கள்ளுக்கு வரி விலக்கு

"கள்ளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது தொடர்ந்து நீடிக்க வேண்டுமா என்பது குறித்து அரசு ஆய்ந்து முடிவெடுக்கும்"

என்று, ஆர். ஆர். முனுசாமி (தி.மு.க.), டாக்டர் ஹண்டே (சுத.) ஆகியோர் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் ப. உ. சண்முகம் அறிவித்தார்.

மண்ணெண்ணெய்ப் பஞ்சம் இல்லை

பதுக்கல்காரர்கட்கு எச்சரிக்கை

புதுடில்லி, டிச. 14—

"நாட்டில் தேவையை நிறைவு செய்யும் அளவுக்கு மண்ணெண்ணெய் கையிருப்பில் இருக்கிறது" என்று இந்திய எண்ணெய் நிறுவனம் -- மற்றும் இரு தனியார் எண்ணெய் நிறுவனங்கள் மக்களுக்கு உறுதியளித்துள்ளன.

"இதில் முறை தவறி நடப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அவைகள் எச்சரித்திருக்கின்றன.

மா--சே--துங்குக்கு எதிராக இராணுவத் தளபதிகள்

கொல்லச் சதி செய்ததாகத் தகவல்

பாதுகாப்பு அமைச்சர் உட்படப் பலர் தூக்கிலிடப்பட்டனராம்

நியூயார்க், டிச. 14—

சீனத் தலைவர் மா-சே-துங்கைக் கொலை செய்ய முயற்சி செய்யப்பட்டதாகவும், இதைத் தொடர்ந்து சீனாவின் இராணுவத் தலைவர்கள் அனைவருமே தூக்கிலிடப்பட்டதாகவும் 'நியூஸ் வீக்' என்னும் அமெரிக்கப் பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

கொல்லப்பட்டவர்களில் பாதுகாப்பு அமைச்சர் லின்--பியோவும் ஒருவராவார் என்று அப் பத்திரிகை தெரிவிக்கிறது.

வீட்டுக் காவலில் பாகிஸ்தான் இராணுவ ஆலோசகர்

புதுடில்லி, டிச. 14—

கிழக்கு வங்க ஆளுநருக்கு, இராணுவ ஆலோசகராக இருந்து வரும் மேஜர்-ஜெனரல் பர்மன் அலி, வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகப் பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த வார இறுதியில் ஐ.நா. செயலாளருக்கு, தாங்கள் பாதுகாப்புடன் வெளியேற உதவி செய்யுமாறு பர்மன் அலி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தத் திட்டத்தை முதலில் யாகியா கானே ஆதரித்ததாகவும், ஆனால், ஏனைய தளபதிகள் எதிர்த்ததன்பேரில் இது கைவிடப்பட்டதாகவும் செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

வங்க தேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் அதிகாரத்தை ஒப்படைக்க யாகியாவின் ஒப்புதலுடன் பர்மன் அலி விரும்பியதாகவும், ஆனால் பிறகு, இதை யாகியா கான் மறுத்தாரென்றும் டெல்லிச் செய்தி ஒன்று கூறுகிறது.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

7-வது கடற்படை இந்தியக் கடலை நோக்கி வருகிறது என்ற செய்தி குறித்துக் கருத்தறிவித்த அமெரிக்க அதிகாரிகள், 'இந்தியா – பாகிஸ்தான் போரில் யாருக்கும் இராணுவ உதவி செய்யாமல் இருந்துவருவதே அமெரிக்காவின் கொள்கையாகும்' என்று அறிவித்திருக்கின்றனர்.

இரதப் போர், சீனா – இரஷ்யா போன்ற வல்லரசுகளின் ஒருபோராக மாறாமல் இருக்கவேண்டும் என்று கருதுவதாக அவர்கள் கூறினர்; 'எல்லையில் சீனா தாக்குதல் நடத்தும் என்று நாங்கள் நம்பவில்லை' என்றும் தெரிவித்தனர்.

அடுத்த கட்டம் முக்கியமானதாகும்

இராணுவ – அரசியல் சூழ்நிலைகள் நாளும் புதிய கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதால், டாக்கா விரைவில் விடுதலையடையவேண்டியது முக்கியமாகும் என்று கூறப்படுகிறது; ஆகவே, அடுத்த இரண்டு மூன்று நாட்கள் மிக முக்கியமானதாகும்.

இந்தியாவுக்குத் தொல்லை கொடுக்க அமெரிக்கா -- சீனா ஆகிய நாடுகள் நடவடிக்கை எடுத்தால், டாக்கா விடுதலை தாமதமடையக்கூடும்.

டாக்காவில் பாகிஸ்தான் இராணுவம் சரணடையவில்லையானால், அடுத்த 48 மணி நேரத்தில் அங்கு முழுத் தாக்குதலில் இறங்க இந்தியா எண்ணியிருக்கிறது; இதற்கான எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டுவிட்டன.

மேற்குப் பகுதியில் பொதுவாக மந்த நிலையே காணப்படுகிறது; ஒரு சில இடங்களில் மட்டும் இந்தியத் துருப்புகள் ஒரு சில வெற்றிகளை அடைந்து வருகிறது.

24 மணி நேர ஊரடங்குச் சட்டம்

இந்தியப் படையினரும் -- விடுதலைப் படையினரும் டாக்கா நகரை நெருங்கிக் கொண்டிருக்கையில், அந்நகரில் 24 மணி நேர ஊரடங்குச் சட்டத்தைப் பாகிஸ்தான் இராணுவம் பிறப்பித்திருக்கிறது.

இந்த நெருக்கடி நிலையில் கலந்து பேசுவதற்காக இந்தியாவுக்கு வந்திருக்கும் இரஷ்ய அமைச்சர், அதிகாரிகளுடன் பல தடவை பேச்சுவார்த்தை நடத்தினர்; நாடு திரும்புமுன் அவர், தலைமையமைச்சர் இந்திரா காந்தியையும் சந்தித்துப் பேசுவார்.

இந்தியாவின் கொள்கை வகுக்கும் துறைத் தலைவர் டி. பி. தார் இரஷ்யாவுக்குச் சென்று -- அந்த அரசுடன் விவாதம் நடத்திவருகிறார்.

"இந்திய -- இரஷ்யா நட்புறவு ஒப்பந்தம் பயன் அளிக்க வேண்டிய முக்கிய தருணம்" இதுவே என்று கருதப்படுகிறது.

பொம்மைத் தலைமையமைச்சரின் பரிதாப நிலை

யாகியா கானுக்குப் பயந்து குடும்பத்தையே வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டார்

இலண்டன், டிச. 14—

பாகிஸ்தான் இராணுவ அரசினரால் தலைமையமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள நூருல் அமீன், இலண்டன் நகரில் ஒரு வீடு வாங்கியிருக்கிறாராம்.

இராணுவ அரசுடன் ஒத்துழைக்கும்படி நூருல் அமீனை, பாகிஸ்தான் இராணுவத்தினர் சில நாட்களுக்குமுன் கோரினர்; அவர்களின் கோரிக்கைக்கு இணங்குவதற்கு முன்பாக, டாக்கா நகரில் தமக்குப் பழக்கப்பட்ட சில பிரிட்டிஷ் நண்பர்களின் துணையுடன் நூருல் அமீன், தமது குடும்பத்தாரை இலண்டனில் குடியேற்றிவிட்டார்.

நூருல் அமீனின் மகன் அன்ஸ்வரும் அமீன் -- அவரது மருமகள் ரஜியா அமீன் -- பேரக் குழந்தைகள் ஆகியோர் இப்போது இலண்டனில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பொழுது அவர்களுக்காக இலண்டன் நகரில், 'நைட்ஸ் டிரிஜ்' பகுதியில் நூருல் அமீன் ஒரு வீடு வாங்கியிருப்பதாக நம்பகமான செய்தி கிடைத்துள்ளது.

இவ்வளவு முன்னெச்சரிக்கையாக நூருல் அமீன் தமது குடும்பத்தாரைப் பத்திரப்படுத்தி உள்ளதிலிருந்து, அவருக்குப் பாகிஸ்தான் இராணுவத்தினரிடம் நம்பிக்கையில்லை என்பது தெரிகிறது.

தமது எதிர்காலத்தைப் பற்றியும் அவருக்கு அச்சம் தோன்றியிருக்கக்கூடும் என்பது வெட்ட வெளிச்சமாகிறதல்லவா?

இந்தியாவுக்கு எதிராக நிக்சனின் மற்றொரு முயற்சி

நியூயார்க், டிச. 14—

"அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்கள் பெற்ற நாடுகளைப் பாகிஸ்தானுக்கு உதவுவதற்கு அனுமதிப்பது பற்றி நிக்சனும் -- அவருடைய ஆலோசகர் கிசிங்கரும் யோசித்து வருவதாகத் தெரிகிறது" என்று 'நியூயார்க் டைம்ஸ்' கூறுகிறது.

கடந்த சில நாட்களாக ஈரான், துருக்கி, ஜோர்டான், சவூதி அரேபியா, லிபியா போன்ற நாடுகளிலிருந்து பாகிஸ்தான் உடனடியாக ஆயுத உதவி கேட்டு வருகிறது -- துருப்புகள் கேட்கவில்லை; இதில், முதல் நான்கு நாடுகளும் நிறைய அமெரிக்க ஆயுதங்கள் வாங்கி வைத்திருப்பவை.

சாதாரணமாக அமெரிக்கா இப்படிச் செய்வது வழக்கமில்லையாயினும், காங்கிரசுக்குத் தெரிவிக்காமலேயே அந்நாட்டின் தலைவர் அனுமதிக்கலாம் என்று வாஷிங்டன் வட்டாரங்கள் கூறின.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.